Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 98 | உள்ளூர் - 08.04.2026 | புதன் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 98 | வெளியூர் - 09.04.2026 | வியாழன் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

கொட்டிக்கிடக்கும் வேலை வாய்ப்புகள்! | போர் நிறுத்தம் அமல்: குறைந்த கச்சா எண்ணெய் விலை! | 4 கிரகங்களின் சேர்க்கை.. இவர்கள் கவனம்! | அனல் பறக்கும் தேர்தல் செய்திகள்!

## மோடி /அமித் ஷா அழைப்பு - டெல்லியில் அண்ணாமலை!



புதுடெல்லி, ஏப். 08–

தமிழக பாஜக தலைவர் பதவியில் இருந்து விடுவிக்கப்பட்டது முதலாகவே, அண்ணாமலை அதிருப்தியில் இருப்பதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அவரது ஆதரவாளர்களும் அதே நிலைப்பாட்டில் தான் இருக்கின்றனர். இந்தசூழலில், சட்டமன்றத் தேர்தலில் அண்ணாமலை போட்டியிடுவார் என அவரது ஆதரவாளர்கள் பெரிதும் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், அண்ணாமலைக்கு பாஜக தலைமை சீட் கொடுக்கவில்லை. கோவை வடக்கு தொகுதியில் அவர் களமிறங்குவார் என எதிர்பார்த்த நிலையில், அங்கு வானதி சீனிவாசனுக்கு சீட் கொடுக்கப்பட்டது. இதனால் அண்ணாமலை ஆதரவாளர்கள் வேதனையில் உள்ளனர். மேலும், அந்த தொகுதியில் வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் அண்ணாமலை பங்கேற்கவில்லை. இதனால் அண்ணாமலையும் கடும் அதிருப்தியில் உள்ளதாக தகவல் பரவியது. இருந்தாலும் அதையெல்லாம் மனதில் வைத்துக் கொள்ளாமல் தமிழகத்திலும், புதுச்சேரி யிலும் பாஜக மற்றும் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து அவர் பிரச்சாரத்திலும் ஈடுபட்டு வருகிறார். அந்தவகையில், நேற்று காரைக்காலில் அவர் பரப்புரையில் ஈடுபட்டார்.

இந்நிலையில், டெல்லியில் பாஜக தலைமையிடம் இருந்து அண்ணாமலைக்கு அவசர அழைப்பு வந்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து, புதுச்சேரியில் இருந்து அண்ணாமலை நேற்று தனி ஹெலிகாப்டரில் புறப்பட்டு சென்னை பழைய விமான நிலையம் வந்தடைந்தார். பின்னர், அங்கிருந்து தனி விமானம் மூலம் அண்ணாமலை டெல்லி புறப்பட்டுச் சென்றார். டெல்லி செல்லும் அண்ணாமலை அங்கு பிரதமர் நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா உள்ளிட்டோரை சந்தித்து பேச உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. கடந்த இரு தினங்களுக்கு முன்பு சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அண்ணாமலை,”தமிழ்நாடு தேர்வு குழுவினர் எனது பெயரை டெல்லிக்கு அனுப்பவில்லை. எனக்கு எப்படி சீட் கிடைக்கும்? இதற்காக டெல்லியில் உள்ள மேலிடத்தை நான் குறை கூறவில்லை. இன்னும் காலம் இருக்கிறது காட்சிகள் மாறத்தான் போகிறது” என பேசியிருந்தார்.

இந்த சூழலில்தான், டெல்லியில் இருந்து அண்ணாமலைக்கு அவசர அழைப்பு வந்திருக்கிறது. தமிழ்நாட்டில், இளைஞர்கள் மத்தியில் பாஜக பிரபலமடைந்ததற்கு அண்ணாமலை முக்கிய காரணமாக இருந்துள்ளார். அதனால், அவரது அந்த திறமையை, தேசிய அளவில் பயன்படுத்த, பாஜக தலைமை முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. பாஜகவின் இளைஞர் பிரிவான யுவமோர்ச்சாவின் தேசிய தலைவராக அண்ணாமலை நியமிக்கப்பட வாய்ப்புகள் உள்ளதாக, பாஜக தேசிய வட்டாரங்களிலிருந்து தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சர்வாதிகாரத்தை நோக்கி நகர்கிறதா இந்தியா..? - மு.க.ஸ்டாலின் கடும் விமர்சனம்!




சென்னை, ஏப். 08–

தமிழ்நாடு முதல்–அமைச்சர் மு,க.ஸ்டாலின் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:–

தொகுதி மறுவரையறை ஆபத்து: சர்வாதிகாரத்தை நோக்கி நகர்கிறதா இந்தியா?

தென்றலாக இருக்கும் தெற்கைப் புயலாக மாற்றாதீர்கள்!

* தென்னக மக்களின் நியாயமான கேள்விகளுக்கு பிரதமர் அவர்கள் பதிலளித்தே தீர வேண்டும்!

* தொகுதி மறுவரையறையை எப்படி நடத்தப் போகிறார்கள் என வெளிப்படையாக அறிவிக்காமல், மத்திய பா.ஜ.க. அரசு இதுவரை ரகசியம் காப்பது ஏன்?

* 2001–ஆம் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் அவர்கள், அடுத்த 25 ஆண்டுகளுக்குத் தொகுதி மறுவரையறையை ஒத்திவைத்ததைப் போல, பிரதமர் மோடி அவர்களும் செய்ய வேண்டுமென தென் மாநிலங்கள் முன்வைத்த நியாயமான கோரிக்கைக்குப் பிரதமர் அவர்களின் பதில் என்ன?

* 5 மாநில தேர்தல்களுக்கு இடையே அவசர அவசரமாக நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடரைக் கூட்டுவதற்கு என்ன அவசியம்?

* “நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடரை ஏப்ரல் 29–க்குப் பிறகு கூட்ட வேண்டும்” என்ற எதிர்க்கட்சித் தலைவர்களின் நியாயமான கருத்தை உதாசீனப்படு த்துவதில் மறைந்துள்ள மர்மம் என்ன?

* அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டிக் கலந்தாலோசிக்காமல் மிக முக்கியமான அரசியலமைப்புத் திருத்தங்களை மேற்கொள்ளும் முயற்சி சர்வாதிகாரமன்றி வேறென்ன?

* எதிர்க்கட்சிகளும் ஊடகங்களும் கேட்கும் கேள்விகளுக்குத்தான் பதில் சொல்வதில்லை. மக்களின் கேள்விகளுக்கேனும் பதில் கிடைக்குமா?

* தென்மாநிலங்களின் உரிமைக்கு உலை வைத்து, வடக்குக்கு வலிமையை வாரி வழங்கும் மத்திய பா.ஜ.க. அரசின் செயல்களைத் தி.மு.க. பார்த்துக்கொண்டு சும்மா இருக்காது.

* இது இங்கு வாழும் மக்களின் எதிர்காலம்! எங்கள் அனுமதியின்றி, எங்களோடு பேசாமல் இதுதொடர்பாக எந்த முடிவு எடுத்தாலும் நாங்கள் அதற்கு உயிரே போனாலும் உடன்பட மாட்டோம்!

நாங்கள் கேட்பது #FairD–elimitation! (நியாயமான வரையறை)

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஏப்ரல் 10-ம் தேதி தஞ்சையில் மாலை 5 மணிக்கு முதல்மைச்சர் மு.க.ஸ்டாலின் பரப்புரை!



சென்னை, ஏப். 08–

நான்காம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 10–ம் தேதி தஞ்சாவூரில் தொடங்குகிறார்.

ஏப்ரல் 10ம் தேதி தஞ்சையில் மாலை 5 மணிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பரப்புரையில் ஈடுபடுகிறார். திருவையாறு, தஞ்சை, ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, பேராவூரணி, பாபநாசம், திருவிடைமருதூர், கும்பகோணம் வேட்பாளர்களுக்கு வாக்கு சேகரிக்கிறார்.

ஏப்ரல் 11–ம் தேதி புதுகோட்டையில் மாலை 4 மணிக்கு நடைபெறும் பொதுக்கூட்டத்தில் முதல்வர் வாக்கு சேகரிப்பில் ஈடுபடவுள்ளார். கந்தர்வக்கோட்டை, விராலி மலை, புதுக்கோட்டஒ, திருமயம், ஆலங்குடி, அறந்தாங்கி வேட்பாளர்க ளுக்கு வாக்கு சேகரிக்கிறார்.

## விஜய் வாகனத்தை பின்தொடர்ந்த தவெகவினர்..! அடுத்தடுத்து விபத்தில் சிக்கிய வாகனங்கள்..!



நெல்லை, ஏப். 08–

நெல்லை, தென்காசி, தூத்துக்குடி கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள 22 சட்டமன்ற தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து விஜய் இன்று ( 08.04.2026) பிரச்சாரம் செய்கிறார்.. இதற்காக சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் விஜய் தூத்துக்குடி சென்றார்.. அங்கிருந்து சாலை மார்க்கமாக தனது பிரச்சார வாகனத்தில் பாளையங்கோட்டை சென்றார்..

இந்த நிலையில் தூத்துக்குடியில் இருந்து பாளையங்கோட்டை நோக்கி சென்ற விஜய் வாகனத்தை அவரின் ரசிகர்கள் பின் தொடர்ந்து சென்றனர்.. விஜய் வாகனத்தை இரு சக்கர வாகனத்தில் பின் தொடர்ந்தவர்கள் அடுத்தடுத்து விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.. 10–க்கும் மேற்பட்ட வாகனங்கள் அடுத்தடுத்து விபத்துக்குள்ளான சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. தலைக்கவசம் அணியாமல் இரு சக்கர வாகனத்தில் சென்றவர்கள் அடுத்தடுத்து விழுந்ததில் பலருக்கு காயம் ஏற்பட்டது.. எனினும் ஆபத்தை உணராமல் விஜய் வாகனத்தை பலர் இரு சக்கர வாகனத்தில் பின் தொடர்ந்து வருகின்றனர்..

## இரு வார கால போர் நிறுத்தம்

# ஈரான் - அமெரிக்கா சம்மதம் தலைகீழாக மாறிய எண்ணெய் சந்தை!

### வெள்ளிக்கிழமை நடக்க இருக்கும் டிவிஸ்ட்!!




வாஷிங்டன், ஏப். 08–

ஈரான் மீது இரண்டு வார காலத்துக்கு தாக்குதல் நடத்த மாட்டோம் என அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்துள்ளார். ஈரானும் இந்த தற்காலிக போர் நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டுள்ளது. இதனால், இரு தரப்புக்கும் இடையே இடைக்கால போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது. இதையொட்டி சில நிபந்தனைகள் பின்பற்றப்படவுள்ளன. , பாகிஸ்தான் நாட்டு தலைவர்கள், அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே மேற்கொண்ட பேச்சுவார்த்தை மூலம் இந்த இடைக்கால போர் நிறுத்தம் ஏற்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

“பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், ராணுவ தளபதி அசிம் முனீரின் கோரிக்கையை ஏற்று ஈரான் மீதான தாக்குதலை நிறுத்தி வைக்கிறேன். இரண்டு வார காலத்துக்கு ஈரான் மீது தாக்குதல் மேற்கொள்ள மாட்டோம். ஹார்முஸ் ஜலசந்தியை முழுவதுமாக, உடனடியாக மற்றும் சரக்கு கப்பல்கள் பாதுகாப்பாக கடக்க வேண்டும்” என சமூக வலைதளத்தில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஈரானின் உச்ச தேசிய பாதுகாப்பு கவுன்சில் இந்த இரண்டு வார கால போர் நிறுத்தத்தை ஏற்றுக் கொண்டுள்ளது. ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி கூறும்போது, தங்களுக்கு எதிரான தாக்குதல் நிறுத்தப்பட்டால் தாங்கள் மேற்கொள்ளும் தாக்குதல் நிறுத்தப்படும் என தெரிவித்துள்ளார். மேலும், ஈரான் புரட்சிகர இஸ்லாமிய படை உடன் இணைந்து ஹார்முஸ் ஜலசந்தியில் பாதுகாப்பான கப்பல் போக்குவரத்து உறுதி செய்யப்படும் என அவர் கூறியுள்ளார்.

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே ஏப்ரல் 10–ம் தேதி அமைதிப் பேச்சுவார்த்தை தொடங்கும் எனத் தெரிகிறது. வெள்ளிக்கிழமை பாகிஸ்தானில் நடக்கும் பேச்சுவார்த்தை தான் போர் நிறுத்தம் நீடிக்குமா, இந்த பிராந்தியம் அமைதியை நோக்கி செல்லுமா என்பதை தீர்மானிக்க போகிறது. இதற்கிடையே போர் நிறுத்த ஒப்பந்தம் மற்றும் ஹார்முஸ் ஜலசந்தி திறப்பு ஆகியவை அமெரிக்காவுக்கு கிடைத்த பெரிய வெற்றி என வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்து இருக்கின்றனர். இஸ்ரேல் தரப்பும் ஈரான் தாக்குதலை நிறுத்த வேண்டும், ஹார்முஸ் ஜலசந்தியை திறக்க வேண்டும் அவ்வாறு நடக்கும் பட்சத்தில் நாங்கள் தாக்குதலை நிறுத்துவோம் என அறிவித்துள்ளது.

**நிபந்தனைகள்? –**

இரு வார கால போர் நிறுத்தம் சார்ந்த முக்கிய நிபந்தனைகளை ஈரான் முன்மொழிந்துள்ளது. இதை ஈரானின் அரசு செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது. அதன் விவரம்:

> இராக், லெபனான், ஏமன் மீதான போரை முழுவதுமாக நிறுத்த வேண்டும்.

> ஈரான் மீதான போரை நிரந்தரமாக நிறுத்த வேண்டும்.

> பிராந்தியத்தில் அனைத்து விதமான மோதல்களையும் முழுமையாக முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

> ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் திறப்பது குறித்து பாதுகாப்பான கப்பல் போக்குவரத்து நெறிமுறைகளை நிறுவ வேண்டும்.

> ஈரானை மீண்டும் கட்டமைப்பதற்கான செலவு தொகையை முழுவதுமாக வழங்க வேண்டும்.

> ஈரான் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும்.

> அமெரிக்கா முடக்கிய ஈரானின் சொத்துகள், நிதியை விடுவிக்க வேண்டும்.

ஈரான் கொடுத்த இந்த ஒற்றை அமைதி அப்டேட்டால், ஒரே நாளில் அப்படியே தலைகீழாக எல்லாம் மாறியது போன்ற உணர்வு ஏற்பட்டுள்ளது. சர்வதேச சந்தையில் அமெரிக்க கச்சா எண்ணெய் விலை ஒரே நாளில் 18% சரிந்து, 92.6 டாலர் என்னும் அளவுக்கு அதலபாதாளத்திற்கு சென்றுள்ளது. இதே பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை 6% குறைந்து, 103.40 டாலராகவும் காணப்படுகிறது.

ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் வரை, அந்நாட்டின் சம்மதம் இல்லாமல் உலக எண்ணெய் சந்தையில் ஒரு அணுவும் அசையாது என்பது இந்த அதிரடி மாற்றத்தின் மூலம் மீண்டும் ஒரு முறை தெளிவாகியுள்ளது.

இது ஈரான் இல்லாமல் உலக எரிசக்தி சந்தையில் ஸ்திரத்தன்மை சாத்தியமில்லை என்பதை மீண்டும் சத்தமாக உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளது. கச்சா எண்ணெய் விலையில் ஏற்பட்ட இந்த அதிரடி விலை வீழ்ச்சி, இந்தியா போன்ற இறக்குமதி நாடுகளுக்கு ஒரு மிகப்பெரிய ஆறுதலாக அமைந்துள்ளது. போர் பீதி விலகி சந்தை தலைகீழாக மாறிய பின்னணி என்ன? பெட்ரோல், டீசல் விலை இனி குறையுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

## ஒருங்கிணைந்த 4 ஆண்டு B. Sc, B.Ed மற்றும் B.A, B.Ed படிப்புகள் 2026-27 கல்வியாண்டு முதல் நிறுத்தம்!




சென்னை, ஏப். 08–

ஒருங்கிணைந்த 4 ஆண்டு B. Sc, B.Ed மற்றும் B.A, B.Ed படிப்புகள் 2026–27 கல்வியாண்டு முதல் நிறுத்தப்பட்டுவிட்டது. கல்வியியல் கல்லூரிகள் இந்த 4 ஆண்டு ஒருங்கிணைந்த பட்டப் படிப்புகளில் மாணவர் சேர்க்கை மேற்கொண்டால் எந்த விதத்திலும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலை. பொறுப்பேற்காது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலை. வெளியிட்டுள்ள அறிக்கையில்:

தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தால் கடந்த 12.09.2025 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதில் National Council for Teacher Education (Recog–nition Norms and Procedure) Amendment Regulations, 2014 dated 25.01.2024 படியும், 03.07.2025 நாளிட்ட அரசு இதழ் அறிவிப்பின் மூலம் மேலும் திருத்தப்பட்டபடியும், ஒருங்கிணைந்த 4 ஆண்டு பி.எஸ்சி.,பி.எட் மற்றும் பி.ஏ.,பி.எட் (B.Sc.B.Ed & B.A.B.Ed) பட்டப்படிப்புகள் 2026 – 2027ம் கல்வியாண்டிலிருந்து நிறுத்தப்பட்டதாகவும், மேலும் ஒருங்கிணைந்த 4 ஆண்டு பி.எஸ்சி.,பி.எட் மற்றும் பி.ஏ.,பி.எட் பட்டப்படிப்புகள் நடத்தும் எந்தவொரு கல்விநிறுவனமும் புதிய மாணவர் சேர்க்கை செய்ய அனுமதிக்கப்படாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள, தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் 12.09.2025 அன்று பொது அறிவிப்பின் படி, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துடன் இணைவுப்பெற்று இயங்கும் கல்வியியல் கல்லூரிகளில் நடத்தப்படும் ஒருங்கிணைந்த 4 ஆண்டு பி.எஸ்சி., பி.எட் மற்றும் பி.ஏ.,பி.எட் (B.Sc.B.Ed & B.A.B.Ed) பட்டப்படிப்புகளில் 2026 – 2027 – ஆம் கல்வியாண்டு முதல் மாணவர் சேர்க்கை செய்ய வழிவகை இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் விதிகளை மீறி மாணவர் சேர்க்கை செய்தால் இப்பல்கலைக்கழகம் எவ்விதத்திலும் பொருப்பெற்காது என கூறப்பட்டுள்ளது.

## தலையங்கம் — மதுரை மணி

புதன்கிழமை 08.04.2026

விசுவாவசு தமிழ் வருடம்

பங்குனி மாதம் 25-ம் தேதி

## அரசு இந்த ஒரு முடிவை எடுத்தால், பெட்ரோல் விலை பாதியாகக் குறையும்..




ஒரு லிட்டரின் விலை ரூ.100க்கு மேல் விற்பனை செய்யப்படுகிறது.. பெட்ரோலின் அடிப்படை விலை வெறும் 55 ரூபாயாக இருக்கும்போது, அது நம்மை வந்தடையும்போது ஏன் 100 ரூபாயாக இருக்கிறது? பெட்ரோல் மற்றும் டீசல் ஆகியவை ஜிஎஸ்டி (GST) வரம்பிற்குள் கொண்டுவரப்பட்டால், விலைகள் உண்மையில் குறையுமா? பலருக்கும் இது குறித்து கேள்விகள் உள்ளன.

நாம் வாங்கும் பெட்ரோலின் விலையில் பாதிக்கும் மேற்பட்ட பகுதி வரிகளாகவே உள்ளது. உதாரணமாக, டெல்லி போன்ற ஒரு நகரத்தில், ஒரு லிட்டர் பெட்ரோலின் அடிப்படை விலை சுமார் 55 ரூபாய் மட்டுமே. ஆனால், மத்திய அரசு விதிக்கும் கலால் வரி, மாநில அரசுகள் விதிக்கும் வரிகள் மற்றும் விற்பனையாளர் (டீலர்) கமிஷன் ஆகியவற்றைச் சேர்த்த பிறகு, ஒரு லிட்டரின் விலை நமக்கு 100 ரூபாயைத் தாண்டிவிடுகிறது. அதாவது, பெட்ரோலின் உண்மையான விலையை விட நாம் வரிகளாகவே அதிக தொகையைச் செலுத்தி வருகிறோம்.

**12 சதவீத ஜிஎஸ்டி விதிக்கப்பட்டால் என்னவாகும்?**

பெட்ரோல் மீது தற்போது விதிக்கப்படும் பல்வேறு வரிகள் நீக்கப்பட்டு, 12 சதவீத ஜிஎஸ்டி மட்டுமே அமல்படுத்தப்பட்டால், ஒட்டுமொத்தச் சூழலுமே மாறிவிடும். அப்போது ஒரு லிட்டர் பெட்ரோலின் விலை சுமார் 68 ரூபாய் முதல் 70 ரூபாய் வரை குறையும். அதாவது, தற்போதைய விலையிலிருந்து சுமார் 30 ரூபாய் வரை சேமிக்க முடியும். டீசலின் விலை ஒரு லிட்டருக்கு சுமார் 67 ரூபாய் முதல் 68 ரூபாய் வரை இருக்கும். இது பொதுப் போக்குவரத்துத் துறைக்கு ஒரு மிகப்பெரிய நிவாரணமாக அமையும்.

**28 சதவீத ஜிஎஸ்டி விதிக்கப்பட்டால்?**


அரசு மிக உயர்ந்த வரி விகிதமான 28 சதவீத ஜிஎஸ்டியை அமல்படுத்தினாலும் கூட, நமக்கு அதிலும் நன்மைதான். அப்போது ஒரு லிட்டர் பெட்ரோலின் விலை சுமார் 75 ரூபாய் முதல் 80 ரூபாய் வரை இருக்கும். இதுவும் தற்போதைய விலைகளை விட மிகக் குறைவாகவே இருக்கும். மேலும், டீசலின் விலை சுமார் 72 ரூபாய் முதல் 75 ரூபாய் வரை இருக்கும்.

**ஜிஎஸ்டி மூலம் விலை ஏன் குறைகிறது?**

தற்போதைய வரி விதிப்பு முறையில், ‘வரிக்கு மேல் வரி’ விதிக்கப்படுகிறது. அதாவது, மத்திய அரசு விதிக்கும் கலால் வரியுடன் இணைக்கப்பட்ட மொத்தத் தொகையின் மீது, மாநில அரசுகள் மீண்டும் ‘மதிப்பு கூட்டு வரியை’ (VAT) விதிக்கின்றன. ஆனால், ஜிஎஸ்டி என்பது ‘ஒற்றை வரி முறை’ ஆகும். இது வரிச் சுமையைக் குறைத்து, சாமானிய மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் அமையும்.


**பெட்ரோல் ஏன் ஜிஎஸ்டி வரம்பிற்குள் கொண்டுவரப்படவில்லை?**

தெளிவான நன்மைகள் இருந்தபோதிலும், எரிபொருளை ஜிஎஸ்டி வரம்பிற்குள் கொண்டுவர மாநில அரசுகள் தயக்கம் காட்டுகின்றன. இதற்கு முக்கியக் காரணம், ‘வருவாய்’ இழப்பு குறித்த அச்சமே ஆகும். பெட்ரோல் மற்றும் டீசல் மீதான மதிப்புக்கூட்டு வரி (VAT), மாநிலங்களின் முக்கிய வருவாய் ஆதாரமாக விளங்குகிறது. இது ஜிஎஸ்டி-யில் சேர்க்கப்பட்டால், தங்களின் வருவாய் குறைந்து, மத்திய அரசைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்படும் என மாநிலங்கள் அஞ்சுகின்றன.



## சினிமா துளிகள்..!

### எல்லாமே AI-யா கோபால்?... சர்ச்சையில் சிக்கிய ரன்பீர் கபூரின் ‘ராமாயணா’ டீசர்!



பெரும் பொருட்செலவில் பிரமாண்டான முறையில் பாலிவுட்டில் உருவாகியுள்ள திரைப்படம் ‘ராமாயணா’ படத்தின் டீசர் அண்மையில் வெளியான நிலையில் அதில் இடம்பெற்றுள்ள கிராபிக்ஸ் காட்சிகள் விவாதப்பொருளாக மாறியுள்ளது. படத்தின் தயாரிப்பாளர் நமித் மல்ஹோத்ரா தனது சமூக வலைத்தளத்தில் அளித்துள்ள விளக்கத்தில், “கடந்த சில நாட்களாக எங்களுக்குக் கிடைத்துள்ள கவனம், எங்களை மேலும் உற்சாகப்படுத்தியுள்ளது. இது உலகம் முழுவதும் உள்ள கோடிக்கணக்கான மக்களின் இதயங்களில் வீற்றிருக்கும் ஸ்ரீராமபிரானின் கதையாகும். அனைவரின் கருத்துக்களையும் ஆலோசனை களையும் நாங்கள் கணக்கில் எடுத்துக்கொண்டு வருகிறோம். ஆயிரக்கணக்கான கலைஞர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் இத்திரைப்படத்தில் பணியாற்றி வருகின்றனர். அனைவரின் எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ற வகையில், மிக உயர்ந்த தரத்திலான ஒரு திரைப்படத்தை வழங்குவதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்” என்று தெரிவித்துள்ளார். இத்திரை ப்படத்தின் விஷுவல் எபெக்ட்ஸ் பணிகளை, நமித் மல்ஹோத்ராவுக்குச் சொந்தமானதும் ஆஸ்கார் விருது வென்றதுமான ‘DNEG’ நிறுவனம் கவனித்து வருகிறது. இத்திரைப்படத்தை இந்த ஆண்டின் பிற்பகுதியில் வெளியி டுவதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

# போரால் பாதிக்கப்பட்ட தொழில்களுக்கு ரூ.2.50 லட்சம் கோடி கடன்: மத்திய அரசு பரிசீலனை!



புதுடெல்லி, ஏப். 08–

மேற்காசிய போரால் பாதிக்கப்பட்டுள்ள தொழில்கள், குறிப்பாக சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் 2.50 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான கடன் உத்தரவாத திட்டத்தை அரசு பரிசீலித்து வருகிறது.

இதுகுறித்து மத்திய அரசின் தகவலறிந்த வட்டாரங்கள் கூறியதாவது:–


நிறுவனங்கள் வாங்கும் கடன்களுக்கு, 2.50 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு கடன் உத்தரவாதம் அளிப்பதற்கான திட்டத்தை மத்திய அரசு பரிசீலித்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ், மேற்காசிய போரால் ஏற்படும் பாதிப்புகள் காரணமாக நிறுவனங்கள் கடன் தவணையை கட்ட தவறினால், 100 கோடி ரூபாய் 5 வரையிலான கடன்களுக்கு கிட்டத்தட்ட 90 சதவீதம் திருப்பி அளிப்பதற்கான உத்தரவாதத்தை வங்கிகள் மற்றும்நிதி நிறுவனங்களுக்கு அரசு வழங்கும்.

அரசுக்கு சொந்தமான தேசிய கடன் உத்தரவாத வாயிலாக இந்த உத்தரவாதம் வழங்கப்படும். இத்திட்டத்துக்காக, அரசு 17,000 கோடி முதல் 18,000 கோடி ரூபாய் வரை ஒதுக்கீடு செய்ய வேண்டியிருக்கும். இவ்வாறு தெரிவித்தன.

எம்.எஸ்.எம்.இ., துறை பெற்ற கடன் 47.80 லட்சம் கோடி ரூபாயாக உயர்வு:–

‘சி.ஆர்.ஐ.எப் ஹை மார்க்’ ‘சிட்பி’ நிறுவனங்கள் கூட்டாக வெளியிட்ட ஆய்வறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:– நாட்டின் சிறுதொழில் துறைக்கு கடன் வழங்கும் சூழல், 2025ல் வேகம் பெற்றுள்ளது. எம்.எஸ்.எம்.இ., துறைக்கு கடந்த ஆண்டு டிசம்பர் வரை 47.80 லட்சம் கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. இது, முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 14.90 சதவீத ஆண்டு வளர்ச்சி ஆகும். இதில் 5 கோடி ரூபாய் வரை கடன் பெற்றுள்ள நிறுவனங்களின் தரவுகள் ஆராயப்பட்டுள்ளன. சிறுதொழில் கடன் நிலுவையில் 80 சதவீதம் தனி நபர் வணிகர்களால் பெறப்பட்டதாகும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 5 மாநில சட்டசபை தேர்தல்: 29-ம் தேதி வரை கருத்து கணிப்புகள் வெளியிடத் தடை!




புதுடெல்லி, ஏப். 08–

தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி, அசாம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய 5 மாநிலங்களுக்கான சட்டசபை தேர்தல் இந்த மாதத்தில் நடைபெற உள்ளது. அதனுடன் சேர்த்து, 6 மாநிலங்களில் இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. இதில், கேரளா மற்றும் அசாம் ஆகிய இரு மாநிலங்களுக்கும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கும் நாளை (ஏப்ரல் 9–ந்தேதி) ஒரே கட்டத்தில் தேர்தல் நடத்தப்படும். இதற்கான வாக்கு எண்ணிக்கை மே 4–ந்தேதி நடைபெறும்.

மேற்கு வங்காளத்தில் 2 கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது. இதன்படி, ஏப்ரல் 23–ந்தேதி முதல் கட்ட தேர்தலும், 29–ந்தேதி 2–ம் கட்ட தேர்தலும் நடத்தப்படுகிறது. வாக்கு எண்ணிக்கை மே 4–ந்தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டு உள்ளது. இதேபோன்று தமிழகத்திற்கு ஏப்ரல் 23–ந்தேதி ஒரே கட்டத்தில் தேர்தல் நடத்தி முடிக்கப்படும். இதற்கான வாக்கு எண்ணிக்கை மே 4–ந்தேதி நடைபெறும். தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன.

சட்டசபை தேர்தல் தொடங்க உள்ள நிலையில், நாளை (ஏப்ரல் 9–ம் தேதி) காலை 7 மணி முதல் ஏப்ரல் 29 மாலை 6.30 மணி வரை கருத்து கணிப்புகளை நடத்தவோ அல்லது வெளியிடவோ தடை விதிக்கப்படுவதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

# ஹார்முஸ் நீரிணையை கடக்கும் கப்பலுக்கு கட்டணம் வசூலிக்க ஈரான் முடிவு!



வாஷிங்டன், ஏப். 08–

அமெரிக்காவும், இஸ்ரேலும் சேர்ந்து ஈரான் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்திவரும் நிலையில், தனது கட்டுப்பாட்டில் இருக்கும் உலகின் முக்கிய நீரிணையான ஹார்முஸ் நீரிணையை ஈரான் மூடிவைத்துள்ளது. இதனால் வளைகுடா நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் கப்பல்கள் உலகின் பிற நாடுகளுக்கு செல்வதில் சிக்கல் ஏற்பட்டது.

கச்சா எண்ணெய் சர்வதேச சந்தைக்கு வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதால் அதன் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இதன் விளைவாக பல்வேறு நாடுகள் சமையல் எரிவாயு தட்டுப்பாடு, பெட்ரோல், டீசல் விலை உயர்வு உள்ளிட்ட பாதிப்புகளை எதிர்கொண்டன. இதற்கிடையில், அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், அனைத்து கப்பல் போக்குவரத்துக்காக ஹார்முஸ் ஜலசந்தியை திறக்க ஈரானுக்கு காலக்கெடு விதித்தார். இந்தக் காலக்கெடு இன்று அதிகாலை 5.30 மணியோடு நிறைவடைய இருந்தது.

இந்த சூழலில், ஈரானுக்கு விதித்த காலக்கெடுவை 2 வாரங்களுக்கு நீட்டிக்க டிரம்ப்புக்கு பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் வேண்டுகொள் விடுத்தார். அதன்படி, ஈரான் மீதான தாக்குதலை இரண்டு வார காலத்திற்கு நிறுத்தி வைக்க டிரம்ப் ஒப்புதல் அளித்தார். மேலும் இது ஒரு போர் நிறுத்தம் என டிரம்ப் அறிவித்தார். போர் நிறுத்தம் செய்யப்படும் இந்த இரண்டு வாரங்களுக்கு ஹார்முஸ் நீரிணையை திறக்க ஈரான் சம்மதித்துள்ளது.

இந்த நிலையில், ஹோர்முஸ் நீரிணையைக் கடக்க ஒரு கப்பலுக்கு இந்திய மதிப்பில் ரூ.18.5 கோடி($2 million) கட்டணட் வசூலிக்கப்படும் என்று ஈரான் அறிவித்துள்ளது. போர் இழப்பீட்டை ஈடு செய்ய வசூலிக்கப்படும் இந்த கட்டணத்தை ஓமன் நாட்டுடன் பகிர்வோம் என ஈரான் தெரிவித்துள்ளது. கட்டணம் வசூலிக்க அனுமதிக்க வேண்டும் என்பது ஈரானி போர் நிறுத்த நிபந்தனைகளில் முக்கியமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கள் இறக்கிய தொழிலாளி மீது துப்பாக்கிச் சூடு: 3 காவலர்கள் மீது வழக்குப்பதிவு!



தென்காசி, ஏப். 08–

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகே மருதம்புத்தூர் பகுதியில் கள் இறக்கிய புகாரில் விசாரிக்கச் சென்ற போது போலீசாரை தாக்கியதாக மணிகண்டன் என்பவர் துப்பாக்கியால் சுடப்பட்டு பிடிக்கப்பட்ட விவகாரத்தில், 3 போலீசார் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. மணிகண்டனின் குடும்பத்தினர், உறவினர்கள் நேற்றிரவு போராட்டம் நடத்திய நிலையில், எஸ்.ஐ இசக்கி ராஜா உள்பட மூவர் மீது 4 பிரிவுகளின் கீழ் ஆலங்குளம் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. தென்காசி மாவட்டம், ஆலங்குளம் அருகே மருதம்புத்தூர் பகுதியை சேர்ந்தவர் பெருமாள் சேட்.

இவரது மகன் மணிகண்டன் (வயது 32). விவசாயியான இவர் பனையேறும் தொழிலாளியாகவும் உள்ளார். ஆலங்குளம் காவல் நிலையத்திற்கு மருதம்புத்தூர் பகுதியில் கள் விற்பனை செய்வதாக ரகசிய புகார் வந்தது. அதன்பேரில் எஸ்.ஐ இசக்கி ராஜா மற்றும் 2 போலீசார் மருதம்புத்தூர் காட்டுப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது அங்கு ஒரு பனை மரத்தில் பதநீர் எடுப்பதற்காக பானை வைக்கப்பட்டு இருந்தது. இதை பார்த்த போலீசார், மரத்தின் உரிமையாளரான மணிகண்டனின் வீட்டிற்கு சென்று விசாரணை நடத்தி னர். பின்னர், மணிகண்டன், அவரது தந்தை ஆகியோரை அழைத்து கொண்டு பனைமரம் இருக்கும் பகுதிக்கு சென்றனர். இதை பார்த்த அவர்களின் உறவினர்களும் அங்கு திரண்டு வந்தனர்.

மணிகண்டனை பனை மரத்தின் மீது ஏறி பானையை எடுக்க போலீசார் வற்புறுத்தியதாக கூறப்படுகிறது. இதையடுத்து அவர் மரத்தில் ஏறிக் கொண்டிருந்தார். அப்போது அங்கிருந்த சிலரை போலீசார் தரக்குறைவாக பேசியதாக கூறப்படுகிறது. இதை கண்ட மணிகண்டன், எஸ்.ஐ இசக்கி ராஜாவிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, தாக்க முயன்றதாக கூறப்படுகிறது. அப்போது இசக்கி ராஜா அருகில் கிடந்த மரக்கட்டையை கொண்டு அடிக்க ஓங்கியதாகவும், அதை மணிகண்டன் தடுத்தபோது அங்கு ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் எஸ்.ஐ இசக்கி ராஜா தலையில் கட்டை பலமாக விழுந்து அவரது மண்டை உடைந்து ரத்தம் கொட்டியது. உடனே எஸ்.ஐ இசக்கி ராஜா வைத்திருந்து துப்பாக்கியால் மணிகண்டனை நோக்கி சுட்டுள்ளார். இதில் 2 குண்டுகள் அவரது கால்களில் பட்டு படுகாயமடைந்தார். இதையடுத்து சக போலீசார் காயமடைந்த 2 பேரையும் மீட்டு சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவ மனைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவம் குறித்து மணிகண்டனின் உறவினர்களுக்கு தெரியவரவே ஆலங்குளம் – முக்கூடல் சாலையில் 100–க்கும் மேற்பட்டவர்கள் திரண்டு வந்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். மேலும், அகில இந்திய காமராஜர் ஆதித்தனார் கழக பொதுச் செயலாளர் சிங் நாடார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு ஆதரவு தெரிவித்தார். ஆலங்குளம் டி.எஸ்.பி. கிளாட்சன் ஜோஸ் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது சம்பந்தமே இல்லாமல் சாதாரண விவசாயி மீது துப்பாக்கி சூடு நடத்திய எஸ்.ஐ மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலிவுறுத்தப்பட்டது. இந்த சம்பவத்தால் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

### அட்லீ இயக்கத்தில் அல்லு அர்ஜுன் நடிக்கும் புதிய படத்திற்கு ‘ராக்கா’ என பெயரிடப்பட்டுள்ளது!!



சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் அட்லி இயக்கத்தில் அல்லு அர்ஜுன் நடிக்கும் புதிய படத்தின் பெயர் “ராக்கா” என அறிவிக்கப்பட்டுள்ளது. அல்லு அர்ஜுன் பிறந்தநாளை முன்னி ட்டு புதிய படத்தின் பெயரை சன்பிக்சர்ஸ் நிறுவனம் அறிவித்தது.



## ஒன்று, இரண்டு அல்ல..4 கிரகங்களின் சேர்க்கை.. இந்த ராசிக்காரர்கள் கவனமாக இருக்க வேண்டும்..!



ஜோதிட சாஸ்திரப்படி, கிரகங்களின் விசேஷ சேர்க்கைகள் மனிதர்களின் வாழ்க்கையில் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நம்பப்படுகிறது. அந்த வகையில், சதுர்கஹ ராஜ யோகம் 2026 ஏப்ரல் மாதத்தின் நடுப்பகுதியில் உருவாக இருப்பதாக ஜோதிடர்கள் கூறுகின்றனர். ஏப்ரல் 11ஆம் தேதி, புதன் கிரகம் மீன ராசியில் பிரவேசிக்கிறது. ஏற்கனவே அந்த ராசியில் சூரியன், செவ்வாய் மற்றும் சனி ஆகிய கிரகங்கள் இருப்பதால், இந்த நான்கு கிரகங்களின் சேர்க்கை சதுர்கஹ ராஜ யோகம் உருவாக வழிவகுக்கிறது. இது ஒரு சக்திவாய்ந்த யோகம் என்றாலும், சில ராசிக்காரர்களுக்கு சவால்களை ஏற்படுத்தும் காலமாகவும் இருக்கலாம் என கூறப்படுகிறது.

**மேஷம்:** ஜோதிடக் கணிப்புகளின்படி, இந்த யோகம் உருவாகும் காலத்தில் மேஷ ராசிக்காரர்களுக்கு மன அழுத்தம் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. வேலை மற்றும் குடும்ப பொறுப்புகளை சமநிலைப்படுத்துவதில் சிரமங்கள் ஏற்படக்கூடும். அலுவலக வேலைப்பளு மற்றும் குடும்ப சூழ்நிலைகள் இணைந்து அழுத்தத்தை உருவாக்கும் சூழல் உருவாகலாம்.

பண விஷயங்களிலும் எச்சரிக்கை அவசியம். யோசிக்காமல் முதலீடு செய்தால் இழப்பு ஏற்படும் அபாயம் உள்ளதாக கூறப்படுகிறது. புதிய முதலீடுகள் அல்லது பெரிய செலவுகளை மேற்கொள்ளும் முன் ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டியது முக்கியம். உடல்நலத்திலும் சில சிறிய பிரச்சனைகள் தோன்ற வாய்ப்பு உள்ளது. குறிப்பாக தலைவலி மற்றும் வயிறு தொடர்பான குறைகள் ஏற்படக்கூடும் என்பதால், உடல்நலத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

**சிம்மம்:** நான்கு கிரகங்களின் சேர்க்கை காரணமாக சிம்ம ராசிக்காரர்களுக்கு எதிர்பாராத பிரச்சனைகள் உருவாகலாம். முன்கூட்டியே திட்டமிடாத சவால்கள் திடீரென உருவாகி, மன அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடும். மேலும், இந்த காலத்தில் எதிரிகளிடமிருந்து அழுத்தம் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது. வேலை மற்றும் வியாபார துறைகளில் எதிர்பாராத தடைகள் உருவாகி, முன்னேற்றம் தாமதமாகலாம்.

இதனால், எந்த முடிவையும் அவசரமாக எடுக்காமல், பலமுறை யோசித்து செயல்படுவது அவசியம் என ஜோதிடர்கள் அறிவுறுத்துகின்றனர். திட்டமிட்ட அணுகுமுறை மட்டுமே இந்த சவால்களை சமாளிக்க உதவும் என கூறப்படுகிறது. ஆன்மீக ரீதியாக, இந்த காலத்தில் விஷ்ணு பகவானை வழிபடுவது மனநிம்மதியையும் சுபபலன்களையும் அளிக்கும் என நம்பப்படுகிறது.

**துலாம்:** துலாம் ராசிக்காரர்களுக்கு குறிப்பாக நிதி தொடர்பான பிரச்சனைகளை உருவாக்கக்கூடும். பணம் தொடர்பான முடிவுகளில் தவறுகள் ஏற்பட்டால் இழப்பை சந்திக்கும் அபாயம் இருப்பதால், முதலீடுகள் மற்றும் கடன் கொடுப்பது போன்ற விஷயங்களில் மிகுந்த எச்சரிக்கை தேவைப்படுகிறது. மேலும், இந்த காலத்தில் யாரையும் அவசரமாக நம்பி செயல்பட வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறது. இல்லையெனில், ஏமாற்றம் சந்திக்கும் சூழல் உருவாகலாம் என கூறப்படுகிறது.

குடும்ப ரீதியாக, பெற்றோரின் உடல்நலத்தில் கவனம் செலுத்த வேண்டியது முக்கியம். சிறிய உடல்நல பிரச்சனைகளும் பெரிதாக மாறாமல் இருக்க முன்கூட்டியே கவனித்துக்கொள்ள வேண்டும். துலாம் ராசிக்காரர்கள் இந்த காலத்தில் சிவலிங்கத்திற்கு நீர் அபிஷேகம் செய்வது நல்ல பலன்களை அளிக்கும் என நம்பப்படுகிறது. இது மனஅமைதியையும் சவால்களை சமாளிக்கும் சக்தியையும் தரும் என கூறப்படுகிறது.

# தமிழ் புத்தாண்டை முன்னிட்டு சென்னை - தூத்துக்குடி இடையே சிறப்பு ரெயில்!



தூத்துக்குடி, ஏப். 08–

தமிழ் புத்தாண்டை முன்னிட்டு கூட்ட நெரிசலை தவிர்க்கும் வகையில், சென்னை – தூத்துக்குடி இடையே சிறப்பு ரெயில் இயக்கப்படுகிறது. இதுதொடர்பாக தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–


சென்னையில் சென்டிரலில் இருந்து வருகிற 13–ந்தேதி இரவு 11.50 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (06151) மறுநாள் மதியம் 12.15 மணிக்கு தூத்துக்குடியை வந்தடைகிறது. தூத்துக்குடியில் இருந்து வருகிற 14–ந்தேதி மாலை 3.30 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (06152) மறுநாள் அதிகாலை 3.30 மணிக்கு சென்னையை சென்றடைகிறது.

இந்த ரெயில் பெரம்பூர், அரக்கோணம், காட்பாடி, ஜோலார்பேட்டை, சேலம், நாமக்கல், கரூர், திண்டுக்கல், கொடைரோடு, மதுரை, விருதுநகர், சாத்தூர், கோவில்பட்டி, தூத்துக்குடி மேலூர் ஆகிய நிறுத்தங்களில் நின்று செல்லும். இந்த ரெயிலில் 2 ஈரடுக்கு படுக்கை வசதி கொண்ட ஏ.சி பெட்டிகளும், 5 மூன்றடுக்கு படுக்கை வசதி கொண்ட ஏ.சி பெட்டிகளும், 11 படுக்கை வசதி கொண்ட பெட்டிகளும், 4 பொதுப்பெட்டிகளும், 2 மாற்றுத்திறனாளிகளுக்கான பெட்டிகளும் இணைக்கப்படுகின்றன. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ரெயிலுக்கான முன்பதிவு நேற்று தொடங்கப்பட்டுள்ளது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



### வயிற்றுப் புற்றுநோயைத் தடுக்க, தினமும் இந்த 5 உணவுகளை கட்டாயம் சாப்பிடுங்க..!



வயிற்றின் உட்புறச் சுவரில் அசாதாரண (புற்றுநோய்) செல்கள் வளரும்போது வயிற்றுப் புற்றுநோய் தொடங்குகிறது. வயிற்றுப் புற்றுநோயைத் தடுப்பதற்கான மிகச் சிறந்த வழி, வாழ்க்கை முறைத் தேர்வுகள் மற்றும் உணவுப் பழக்க வழக்கங்கள் மூலமாகவே ஆகும். இதனுடன், மரபணுக் காரணிகளும் இந்த அபாயத்தைப் பாதிக்கக்கூடும். உங்கள் உணவில் உள்ள சில உணவுகள், உங்கள் வயிற்றைப் புற்றுநோயிலிருந்து பாதுகாப்பதோடு, உங்கள் உடலின் ஒட்டுமொத்த நலனையும் பராமரிக்க உதவும். புற்றுநோயைத் தடுத்து நிறுத்தி, ஆரோக்கியமாக இருக்க உங்களுக்கு உதவக்கூடிய ஐந்து உணவுகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

கேரட், தக்காளி, கீரை வகைகள், பெரி போன்ற வண்ணமயமான காய்கறிகளையும் பழங்களையும் சாப்பிடுவது வயிற்றுக்கு நன்மை அளிக்கிறது. இந்த உணவுகளில் உள்ள ஆன்டிஆக்ஸிடன்ட்கள், செல்களைச் சேதப்படுத்தி புற்றுநோய் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் ஃப்ரீ ரேடிக்கல்களை அகற்ற உதவுகின்றன. பல்வேறு வகையான உணவுகளைக் கொண்ட ஒரு மாறுபட்ட தாவர அடிப்படையிலான உணவுமுறை, உங்கள் நோய் எதிர்ப்பு அமைப்பை மேம்படுத்தி, அழற்சியைக் குறைக்கும்.

பூண்டு மற்றும் வெங்காயம் போன்ற அல்லியம் குடும்பத்தைச் சேர்ந்த இந்தக் காய்கறிகள், பெரும்பாலும் கறிகளில் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் புற்றுநோயை எதிர்க்கும் திறன்களைக் கொண்ட கந்தகச் சேர்மங்கள் உள்ளன. இந்த உணவுகளில் காணப்படும் சேர்மங்கள், புற்றுநோய் செல்கள் பெருகுவதைத் தடுத்து, உடலின் இயற்கையான பாதுகாப்பு வழிமுறைகளை வலுப்படுத்த உதவுகின்றன. பூண்டு மற்றும் வெங்காயத்தை தொடர்ந்து உட்கொள்வது வயிற்றுப் புற்றுநோய் உருவாவதைத் தடுக்கும் பாதுகாப்பு விளைவைக் கொண்டிருப்பதாக ஆய்வுகள் காட்டுகின்றன.

சமீபகாலமாகப் பிரபலமடைந்து வரும் பச்சைத் தேநீர், உடல் எடையைக் குறைப்பதற்கான ஒரு பிரபலமான பானமாகும். பச்சைத் தேநீரில் உள்ள பாலிஃபீனால்கள் மற்றும் கேடசின்கள் ஆன்டிஆக்ஸிடன்ட்களாகச் செயல்படுகின்றன, அவை புற்றுநோயைத் தடுப்பவையாகவும் செயல்படுகின்றன. பச்சைத் தேநீர் அருந்துவது செல்களை சேதத்திலிருந்து பாதுகாக்கிறது. இது வயிற்றுப் புற்றுநோயைத் தடுக்க உதவுகிறது என்று ஆராய்ச்சி காட்டுகிறது. ஒரு நாளைக்கு 2–3 கப் பச்சைத் தேநீர் அருந்துவது ஒரு பாதுகாப்பு உணவுப் பொருளாகச் செயல்படக்கூடும்.

உங்கள் நாளைத் தொடங்க கொட்டைகள் ஒரு சிறந்த வழியாகும். ஆலிவ் எண்ணெய் மற்றும் அவகேடோவில் காணப்படும் ஆரோக்கியமான கொழுப்புகள் செரிமானத்திற்கு உதவுவது மட்டுமல்லாமல், அவை அழற்சியையும் குறைக்கின்றன. இந்த உணவுகளில் உள்ள ஆன்டிஆக்ஸிடன்ட்கள் மற்றும் வைட்டமின் E ஆகியவை செல்களை ஆக்ஸிஜனேற்ற அழுத்தம் மற்றும் சேதத்திலிருந்து பாதுகாக்கின்றன. இந்த உணவுகளில் உள்ள கொழுப்புகள் வளர்சிதை மாற்றத்தை அதிகரித்து, நோய் எதிர்ப்பு அமைப்பை வலுப்படுத்துகின்றன, இது கட்டி வளர்ச்சியை எதிர்த்துப் போராட உடலுக்கு உதவுகிறது.

சுத்திகரிக்கப்பட்ட தானியங்களுக்குப் பதிலாக பழுப்பு அரிசி, குயினோவா, முழு கோதுமை ரொட்டி மற்றும் ஓட்ஸ் ஆகியவற்றை உட்கொள்வது குடல் ஆரோக்கியத்திற்கு பல நன்மைகளை வழங்கும். தானியங்களில் உள்ள அதிக நார்ச்சத்து செரிமானத்திற்கு உதவுகிறது மற்றும் புற்றுநோய் உருவாக்கத்திற்கு வழிவகுக்கும் நச்சுகளை நீக்குகிறது. தினமும் கூடுதலாக 10 கிராம் நார்ச்சத்து உட்கொள்வது, வயிற்றுப் புற்றுநோய் அபாயத்தை 44% வரை குறைக்க உதவும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. முழு தானியங்கள் உடல் எடையைக் கட்டுப்படுத்தவும், புற்றுநோய் வளர்ச்சியை எதிர்த்துப் போராடவும் உதவுவதோடு, செரிமானத்தை மேம்படுத்தும் முக்கிய ஊட்டச்சத்துக்களையும் வழங்குகின்றன.

## போர் நிறுத்தத்தை ஆதரிக்கிறோம்.. ஆனால் அது லெபனானுக்கு பொருந்தாது - இஸ்ரேல்!

ஈரான், ஏப். 08–

ஈரான் மீதான தாக்குதல்களை இரண்டு வாரங்களுக்கு நிறுத்துவதற்கான அமெரிக்காவின் முடிவை இஸ்ரேல் வரவேற்றுள்ளது. ஆனால், இந்தத் தற்காலிகப் போர்நிறுத்த ஒப்பந்தம் லெபனானுக்குப் பொருந்தாது என்று இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவுகளின்படி, "ஈரான் உடனடியாக ஜலசந்தியை திறந்துவிட்டு, அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் பிராந்திய நாடுகளின் மீதான அனைத்துத் தாக்குதல்களையும் நிறுத்தும் பட்சத்தில், ஈரானுக்கு எதிரான தாக்குதல்களை இரண்டு வாரங்களுக்கு நிறுத்திவைக்கும் அதிபர் டிரம்பின் முடிவை இஸ்ரேல் ஆதரிக்கிறது.

அமெரிக்கா, இஸ்ரேல், ஈரானின் அண்டை அரபு நாடுகள் மற்றும் உலகிற்கு, ஈரான் இனி அணுசக்தி, ஏவுகணை மற்றும் பயங்கரவாத அச்சுறுத்தலை ஏற்படுத்தாதிருப்பதை உறுதி செய்வதற்கான அமெரிக்காவின் முயற்சியையும் இஸ்ரேல் ஆதரிக்கிறது.

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் இஸ்ரேலின் பிராந்தியக் கூட்டாளிகள் ஆகியோரால் பகிரப்படும் இந்தக் குறிக்கோள்களை, வரவிருக்கும் பேச்சுவார்த்தைகளின் மூலம் அடைவதில் உறுதியாக இருப்பதாக அமெரிக்கா இஸ்ரேலுக்கு வாக்கு கொடுத்துள்ளது. இந்த இரண்டு வார கால போர்நிறுத்த உடன்பாட்டில் லெபனான் அடங்காது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நடிகர்கள் பின்னால் செல்லும் இளைஞர்கள்; எச்சரிக்கிறார் ரஜினி!



சென்னை, ஏப். 08–

இளைஞர்கள் போதைப்பழக்கத்துக்கு அடிமை ஆகக்கூடாது என நடிகர் ரஜினி தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் நிருபர்களிடம் ரஜினி கூறியதாவது: நடிகர்கள் பின்னால் செல்லும் இளைஞர்கள் தான் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அவர்களுக்கு ஏதாவது அடிபட்டால் அவர்களுக்கு தானே காயம் ஆகும். இளைஞர்களுக்கு படிப்பதில் மட்டும் தான் முழு கவனம் இருக்க வேண்டும்.

படிக்கிற டைமில் படிக்காமல் இருந்தால் வாழ்க்கையில் ரொம்ப கஷ்டப்பட வேண்டி இருக்கும். அதுமட்டும் மனதில் வைத்து கொண்டு இளைஞர்கள் படிப்பில் மட்டும் தீவிர சிந்தனை எல்லாம் இருக்க வேண்டும்.

முதலில் உடம்பை ஆரோக்கியமாக பார்த்துக்கொள்ள வேண்டும். இந்த டைமில் இளைஞர்களுக்கு முதலில் சொல்வது, தயவு இளைஞர்கள் குடிப்பழக்கத்திற்கும், கஞ்சா இதில் எல்லாம் நீங்கள் அடிமை ஆகாதீர்கள்.

அதில் அடிமையானால் உங்கள் வாழ்க்கையே கெட்டு போய்விடும். அது நீங்கள் மட்டுமல்ல உங்கள் சம்பந்தப்பட்ட தாய், தந்தை மற்றும் குடும்பம் என எல்லோருடைய வாழ்க்கையையும் நரகமாக்கிவிடும். அதனால் அது போன்ற நண்பர் கிடைத்தால் அவர்கள் கிட்ட கூட போகாதீர்கள். தூர விலகிவிடுங்கள். இவ்வாறு ரஜினி கூறினார்.

**நழுவிய ரஜினி!**

விஜயின் ஜனநாயகன் படம் பிரச்னை குறித்து நிருபர்கள் எழுப்பிய கேள்விக்கு, "சாரி. கருத்து சொல்ல விரும்பல" என நடிகர் ரஜினி பதில் அளித்துள்ளார்.

## தங்கம் விலை மீண்டும் உயர்வு!

சென்னை, ஏப். 08–



சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.2,720 உயர்ந்து ரூ.1,13,600–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.340 உயர்ந்து ரூ.14,200–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கத்தை போன்று வெள்ளி விலையும் இன்று உயர்ந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.10 உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.265–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## தமிழ் புத்தாண்டு தொடர் விடுமுறை: சென்னையில் இருந்து சிறப்பு பஸ்கள் இயக்கம்!

சென்னை, ஏப். 08–

வார விடுமுறை நாட்களோடு வருகிற 14–ந்தேதி தமிழ் புத்தாண்டு விடுமுறையும் வருவதால் வெளியூர் பயணம் அதிகரிக்க கூடும் என்பதால் அரசு போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன. வழக்கமாக இயக்கப்படும் அரசு பஸ்களோடு கூடுதலாக சிறப்பு பஸ்கள் இயக்குவதற்கு திட்டமிடப்பட்டு உள்ளது. கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 10 மற்றும் 11–ந்தேதி மிக சிறப்பு பஸ்கள் 970, கோயம்பேட்டில் இருந்து திருவண்ணாமலை, நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 190 பஸ்களும், மாதவரத்தில் இருந்து 24 பஸ்களும் விடப்பட்டுள்ளது.



## சாத்தான்குளம் வழக்கின் தீர்ப்பு எதிரொலி: இன்ஸ்பெக்டர்கள் உத்தரவின்றி போலீசார் லத்தியை எடுக்க தடை!

சென்னை, ஏப். 08–





தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளத்தைச் சேர்ந்த ஜெயராஜ், அவரது மகன் பென்னிக்ஸ் இருவரையும் அடித்துக் கொலை செய்த வழக்கில், இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், சப்–இன்ஸ்பெக்டர்கள் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ் உள்ளிட்ட 9 போலீசாருக்கு, மதுரை முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றம் தூக்கு தண்டனை விதித்துள்ளது.

இந்த தீர்ப்பு, போலீசாரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. மேலும், பல்வேறு சம்பவங்களில் போலீசார் கொல்லப்பட்ட வழக்குகளில், இதுபோன்ற தண்டனைகள் வழங்கப்படுவதில்லை என, கேள்விகள் எழுப்பி வருகின்றனர்.

இந்த நிலையில், சாத்தான்குளம் வழக்கின் தீர்ப்பு எதிரொலியாக, மாநிலம் முழுதும் காவல் நிலையங்களில், விசாரணையின்போது அடிக்க பயன்படுத்தும் இரும்பு கம்பிகள், பிளாஸ்டிக் குழாய்களை, அப்புறப்படுத்த அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் தெரிவித்திருப்பதாவது:– சாத்தான்குளம் தீர்ப்பை சுட்டிக்காட்டி, எங்களுக்கு போலீஸ் அதிகாரிகள் பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்துள்ளனர். ஒருவரை அடித்துதான் உண்மையை வரவழைக்க முடியும் என, நம்பும் போலீஸ்காரர்கள், இப்பணிக்கே தகுதியற்றவர்கள். அறிவியல் ரீதியான புலனாய்வு விசாரணை முறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், ஒருவரை அடிப்பதற்கு போலீசாருக்கு எவ்வித அதிகாரமும் வழங்கப்படவில்லை. இன்ஸ்பெக்டர் மற்றும் டிஎஸ்பிக்கள் கண்காணிப்பின்றி, காவல் நிலையங்களில் யாரையும் விசாரிக்க கூடாது. இன்ஸ்பெக்டர்களின் உத்தரவின்றி, போலீசார் லத்தியை எடுக்கவே கூடாது. இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.




**இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்**

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்

பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை

Ph: 98659 88881


## வீட்டு கடன் வாங்கியவர்களுக்கு ரிசர்வ் வங்கி முக்கிய அறிவிப்பு!

மும்பை, ஏப். 08–







இந்திய ரிசர்வ் வங்கியின் நிதி கொள்கை கூட்டம் மும்பையில் கடந்த திங்கட்கிழமை அன்று தொடங்கியது. ரிசர்வ் வங்கி ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா தலைமையில் 6 பேர் கொண்ட அதிகாரிகள் நிதி கொள்கை கூட்டத்தில் நாட்டின் பொருளாதாரம், ஈரான் போரால் ஏற்பட்டுள்ள தாக்கம், பணவீக்கம், நாட்டின் ஜிடிபி, அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து முக்கியமான ஆலோசனை நடத்தினர்.

ஈரான் போர் தொடங்கிய பிறகு நடைபெறும் முதல் ரிசர்வ் வங்கி நிதி கொள்கை கூட்டம் இது. அதுமட்டுமில்லாமல் நடப்பு நிதியாண்டின் முதல் கூட்டம் என்பதாலும் பெரிய எதிர்பார்ப்புகள் நிலவின. ஏனெனில் ஈரான் போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டதால் இந்தியாவிற்கு எல்பிஜி, கச்சா எண்ணெய் வரத்து நின்று போனது. இதன் காரணமாக எல்பிஜி தட்டுப்பாடு ஏற்பட்டு உணவகங்கள் மூடப்பட்டன, உணவுகளின் விலை உயர்ந்தன. அதே வேளையில் வேறு நாடுகளிடம் இருந்து கச்சா எண்ணெய், எல்பிஜி ஆகியவை வாங்கப்படுகின்றன. இதனால் அதிக அமெரிக்க டாலரை பயன்படுத்தி வெளிநாட்டு கரன்சி கையிருப்பும் குறைந்துள்ளது. இந்த சூழலில் இரண்டு நாட்களாக நடந்த நிதி கொள்கை குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை அறிவிப்பதற்காக ரிசர்வ் வங்கி ஆளுநரான சஞ்சய் மல்ஹோத்ரா இன்று (08.04.2026) காலை 10 மணிக்கு செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது வங்கிகளுக்கான குறுகிய கால கடன்கள் மீதான ரெப்போ வட்டி விகிதத்தில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்ற அறிவிப்பை வெளியிட்டார். இதன் மூலம் ரெப்போ வட்டி விகிதம் 5.25 சதவீதம் என்ற அளவிலேயே தொடர்கிறது. ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றம் இல்லை என்பதால் வீடு, வாகன கடன்கள், தனிநபர் கடன்கள், தங்க நகை கடன்களுக்கான வட்டி விகிதத்தில் எந்த ஒரு மாற்றமும் ஏற்படாது. ஈரான் போர் காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கல்களுக்கு மத்தியிலும் ரிசர்வ் வங்கி வட்டியை மாற்றாமல் இருப்பது சற்றே நிவாரணம் தருகிறது.






# வேலை வாய்ப்பு

## சென்னை சுங்க வேலை வாய்ப்புகள்!

### Customs Chennai Recruitment 2026

- Vacancy: 10
- Post Name: Tradesman, Seaman, Greaser
- Qualification: 10th, ITI
- Selection Process: Written Test, PET (Swimming)

நிறுவனத்தின் பெயர்: சுங்க ஆணையர் (பொது) அலுவலகம்
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 10
டிரேட்ஸ்மேன், சீமேன், கிரீசர் பணியிடங்கள்
பணியிட மாற்றம்: சென்னை
தொடங்கும் தேதி: 04.04.2026
கடைசி தேதி: 30.04.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://chennaicustoms.gov.in/

## பாண்டிசேரி பல்கலைக்கழக வேலைவாய்ப்புகள்!

### Pondicherry University Recruitment 2026

- Vacancy: 18
- Post Name: Non Teaching
- Qualification: Bachelor Degree, Master Degree
- Selection Process: Written test/Skill Test,, Interview

நிறுவனத்தின் பெயர்: புதுச்சேரி பல்கலைக்கழகம்
அறிவிப்பு எண்: PU/RC/NT/2026/51
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
மொத்த காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை: 18 துணைப் பதிவாளர், உதவிப் பதிவாளர், மக்கள் தொடர்பு அதிகாரி, பிரிவு அதிகாரி, தனிச் செயலாளர் பணியிடங்கள்
பணியிடமிருக்கும் இடம்: புதுச்சேரி
தொடங்கும் தேதி: 10.03.2026
கடைசி தேதி: 10.04.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.pondiuni.edu.in/

## இந்தியா சார்டர்ட் அகௌண்டன்ட்ஸ் இன்ஸ்டிடியூட் (ICAI) 109 காலிப்பணிகள்!

### ICAI Recruitment 2026

- Vacancy: 109
- Post Name: Executive Officer, Director - Legal
- Qualification: B.E/B.Tech, LLB, CA, CS
- Selection Proces: Computer Based Test, Document Verification

நிறுவனத்தின் பெயர்: இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (ICAI)
அறிவிப்பு எண்: 04/2026/HRD/03
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 109
செயல் அலுவலர், இயக்குநர் – சட்ட பணியிடங்கள்
பணியிடங்கள்: இந்தியா முழுவதும்
தொடங்கும் தேதி: 01.04.2026
கடைசி தேதி: 15.04.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் மூலம் மட்டும்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://resource.cdn.icai.org/

## மத்திய சமஸ்கிருத பல்கலைக்கழகம், டெல்லி வேலைவாய்ப்புகள்!

### CSU Recruitment 2026

- Vacancy: 144
- Post Name: Non Teaching
- Qualification: 10th, 12th, ITI, Diploma, B.E/B.Tech, Any Degree
- Selection Process: Written Test, Interview

நிறுவனத்தின் பெயர்: மத்திய சமஸ்கிருத பல்கலைக்கழகம், டெல்லி
அறிவிப்பு எண்: 02/2026
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 144 கற்பித்தல் அல்லாத பணியிடங்கள்
பணியிட மாற்றம்: புது டெல்லி
தொடங்கும் தேதி: 16.03.2026
கடைசி தேதி: 16.04.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://sanskrit.nic.in/

## கடற்படை கப்பல் பழுதுபார்க்கும் தளம் (கொச்சி) மற்றும் கடற்படை விமான தளம் (கொச்சி) காலியிடங்கள்!

### Naval Ship Repair Yard Recruitment 2026

- Vacancy: 240
- Post Name: Apprentice
- Qualification: ITI
- Selection Proces: Merit List, Certificate Verification

நிறுவனத்தின் பெயர்: கடற்படைக் கப்பல் பழுதுபார்க்கும் தளம் (KOC) மற்றும் கடற்படை விமானத் தளம் (KOC)
வேலைவாய்ப்பு வகை: தொழிற்பயிற்சி
கால அளவு: ஒரு வருடம்
மொத்த காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை: 240 தொழிற்பயிற்சி பணியிடங்கள்
பணியிட மாற்றம்: கொச்சி
தொடங்கும் தேதி: 28.03.2026
கடைசி தேதி: 17.04.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.apprenticeshipindia.gov.in/




# அனல் பறக்கும் தேர்தல் களம்..!





இராமநாதபுரம் அண்ணா பொறியியல் கல்லூரியில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026–க்கான வாக்கு எண்ணும் மையத்தை தேர்தல் பார்வையாளர்கள் (பொது) டாக்டர் மணிஷ் ரஞ்சன் (திருவாடானை) , ஓம் பிரகாஷ் (இராமநாதபுரம்) , ரெஹனா பதூல் (பரமக்குடி –தனி) , உலகநாதன் (முதுகுளத்தூர்) , தேர்தல் பார்வையாளர் (காவல் துறை) ஜலிந்தர் தத்தாத்ரிய சுபேகர், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி. சந்தீஷ் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். மாவட்ட வருவாய் அலுவலர் வ.சங்கரநாராயணன் , கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திவ்யான்ஷீநிகம் உடன் இருந்தனர் .



2026 சட்டமன்ற தேர்தலில் திருமயம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட திமுக வேட்பாளர் அமைச்சர் ரகுபதி வேட்பு மனு தாக்கல் செய்த நிலையில் தொடர்ந்து பரப்புரையில் ஈடுபட்டு பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை கேட்டு வருகிறார். இந்நிலையில் புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகே உள்ள மல்லாங்குடியில் பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை கேட்டு அமைச்சர் ரகுபதி பரப்பரையில் ஈடுபட்டார்.



புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் பாஜக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ராமச்சந்திரன், மாவட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபயிற்சி மேற்கொண்டவர்களிடம் தாமரை சின்னத்திற்கு வாக்களிக்குமாறு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் – 2026–ஐ முன்னிட்டு, இராமநாதபுரம் நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் , வாக்காளர் விழிப்புணர்வு குறித்த இரண்டு சக்கர வாகன விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.சந்தீஷ், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க மாவட்ட திட்ட இயக்குநர் பாபு ஆகியோர் உடன் இருந்தனர்.



தேனி மாவட்டம் போடி சட்டமன்ற தொகுதியில் தி.மு.க.வேட்பாளராக போட்டியிடும் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், போடி சட்டமன்ற தொகுதிபூதிப்புரம்பேரூராட்சியில்உள்ள ஆதிப் பட்டி,பூதிப்புரம், வலையபட்டி, மற்றும் கோடாங்கிபட்டி, வாழையாத்துப்பட்டி காமராஜபுரம் உள்பட சுற்றுபுற கிராமங்களில் வாக்கு சேகரித்தார். உடன் வடக்கு மாவட்ட செயலாளர், தங்கதமிழ்செல்வன் எம்.பி, ஒன்றிய செயலாளர்கள்லட் சுமணன், ஐயப்பன். முன்னாள்எம்.பி, ரவீந்திரநாத். போடி நகர செயலாளர் புருஷோத்தமன் ஆகியோரும் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

## ஏப். 9-ல் வெளியாகிறது இறுதி வேட்பாளர்கள் பட்டியல்!

சென்னை, ஏப். 08–

இறுதி வாக்காளர் பட்டியல் வேட்புமனு தாக்கல் நிறைவு பெற்றவுடன் அறிவிக்கப்படும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் அறிவித்திருந்தார். அதன்படி, இறுதி வாக்காளர் பட்டியல் நாளை வெளியிடப்படஉள்ளது. வேட்பு மனுக்களை திரும்பப் பெற ஏப்.9 கடைசி நாளாகும்.




முன்னதாக தமிழகத்தில் மொத்த வாக்காளர்கள் பட்டியலை வெளியிட்டிருந்தது. இதன்படி மொத்தம் 5.73 கோடி வாக்காளர்கள் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில், ஆண் வாக்காளர்கள் 2.80 கோடி பேரும், பெண் வாக்காளர்கள் 2.93 கோடி பேரும், மூன்றாம் பாலினத்தவர் 7,728 பேரும் உள்ளதாக அறிவிக்கப்பட்டு உள்ளது. இந்த வாக்காளர் பட்டியல், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட உள்ளது.

இதற்கிடையே வாக்காளர் இறுதிபட்டியலை தேர்தல் கமிஷன் நேற்று வெளியிட்டது. தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் (எஸ்.ஐ.ஆர்) நடத்தப்படுவதற்கு முன்பாக தமிழகத்தில் 6 கோடியே 41 லட்சத்து 14 ஆயிரத்து 587 வாக்காளர்கள் இருந்தனர். எஸ்.ஐ.ஆர். பணி முடிந்த பின்னர் நவம்பர் 19–ந் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அதில் 5 கோடியே 43 லட்சத்து 76 ஆயிரத்து 756 வாக்காளர்கள் மட்டுமே இடம் பெற்றிருந்தனர். 97 லட்சம் பேர் நீக்கப்பட்டு இருந்தனர்.

மீண்டும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. இந்த காலகட்டத்தில் 27.53 லட்சம் தகுதியுள்ள வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர். மேலும் 4.23 லட்சம் தகுதிபெறாதவர்கள் நீக்கப்பட்டனர். அனைத்து பணிகளும் முடிவுற்ற நிலையில் கடந்த பிப்ரவரி 23–ந் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அதன்படி, வாக்காளர்களின் எண்ணிக்கை 5 கோடியே 67 லட்சத்து 7 ஆயிரத்து 380 ஆக இருந்தது. அவர்களில் ஆண் வாக்காளர்கள் 2 கோடியே 77 லட்சத்து 38 ஆயிரத்து 925 பேர்; பெண் வாக்காளர்கள் 2 கோடியே 89 லட்சத்து 60 ஆயிரத்து 838 பேர்; மூன்றாம் பாலினத்தவர் 7,617 ஆகும்.

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் நடக்கும் காலகட்டம் என்பதால், வேட்புமனு தாக்கலின் இறுதி நாளுக்கு 10 நாட்கள் முன்புவரை பெயர் சேர்க்க விண்ணப்பம் அளிக்கலாம் என்று தேர்தல் கமிஷன் அறிவித்திருந்தது. அதன்படி சுமார் 6½ லட்சம் விண்ணப்பங்கள் பெயர் சேர்ப்புக்காக அளிக்கப்பட்டன.இந்த விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு கடந்த 6–ந்தேதி வாக்காளர் துணை பட்டியல் தயார் செய்யப்பட்டது. இறுதி வாக்காளர் பட்டியலுடன் துணை பட்டியலை இணைத்து புதிய வாக்காளர் பட்டியலை நேற்று தேர்தல் கமிஷன் வெளியிட்டது.

அதன்படி தமிழகத்தின் மொத்த வாக்காளர் எண்ணிக்கை தற்போது 5 கோடியே 73 லட்சத்து 43 ஆயிரத்து 291 ஆகும். இது, கடந்த இறுதி வேட்பாளர் பட்டியலைவிட 6 லட்சத்து 35 ஆயிரத்து 911 வாக்காளர்களை கூடுதலாக கொண்டதாக உள்ளது.

தற்போதைய புதிய பட்டியலில் உள்ள 5.73 கோடி வாக்காளர்களில் 2 கோடியே 80 லட்சத்து 30 ஆயிரத்து 658 பேர் ஆண்கள், 2 கோடியே 93 லட்சத்து 4 ஆயிரத்து 905 பேர் பெண்கள், 7,728 பேர் மூன்றாம் பாலினத்தவராகும். தற்போது வெளியிடப்பட்டுள்ள இறுதிக்கட்ட வாக்காளர் பட்டியல் 6.4.2026 நிலவரப்படி தயார் செய்யப்பட்டதாகும். வழக்கம் போல இந்த புதிய வாக்காளர் பட்டியல்படி, தமிழகத்தில் ஆண் வாக்காளர்களைவிட பெண் வாக்காளர்கள் 12 லட்சத்து 74 ஆயிரத்து 247 பேர் அதிகமாக உள்ளனர்.

இந்த பட்டியல்தான் நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலுக்கு பயன்படுத்தப்பட உள்ளது. இந்த பட்டியல்தான், அரசியல் கட்சிகளுக்கும், வாக்குப்பதிவு அலுவலர்களுக்கும், வாக்குச்சாவடிகளில் அனுமதிக்கப்படும் வேட்பாளர்களின் முகவர்களுக்கும் அளிக்கப்படும். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விரும்புகிறவர்கள் தொடர்ந்து விண்ணப்பிக்கலாம். ஆனால் தகுதியுள்ள வாக்காளர் என்றாலும், இந்த தேர்தலில் வாக்களிக்க வாய்ப்பு கிடைக்காது.

## வயதில் மூத்த வேட்பாளர் பட்டியல்– பினராயி விஜயனுக்கு முதல் இடம்!

கேரளா, ஏப். 08–

கேரளம் மாநில சட்டசபை பொது தேர்தல் நாளை(வியாழக்கிழமை) நடக்கிறது. 140 தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறுகிறது. தேர்தலில் 883 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். வேட்பாளர்களில் 10 பேர் 76 வயதை கடந்தவர்களாக உள்ளனர். இதில் முதல் இடத்தில் பினராயி விஜயன் உள்ளார். அவருக்கு வயது 82.



இவர் கண்ணூர் மாவட்டம் தர்மமடம் தொகுதியில் இடது முன்னணி சார்பில் வேட்பாளராக போட்டியிடுயிடுகிறார். அவருக்கு அடுத்தபடியாக அமைச்சர் ராமச்சந்திரன் கடனம்பள்ளி உள்ளார். இவருக்கு வயது 81. இவர் கண்ணூர் தொகுதியில் இடது முன்னணி சார்பில் வேட்பாளராக நிறுத்தப்பட்டு உள்ளார். அடுத்த இடத்தில் அமைச்சர் ஏ.கே. சசீந்திரன் (80) உள்ளார்.


தர்மமடம் தொகுதியில் 3–வது முறையாக போட்டியிடும் பினராயி விஜயன் 60 ஆண்டு கால அரசியல் பாரம்பரியம் கொண்டவர். வயது வெறும் எண் மட்டுமே என்பதை ஒவ்வொரு தேர்தலிலும் தனது தனிப்பட்ட செயல்பாடு மூலம் வெளிப்படுத்தி வருகிறார்.

நடப்பு தேர்தலில் தனது சொந்த தொகுதி மட்டுமல்லாது. மாநிலம் முழுவதும் இடது முன்னணி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜெயலலிதா ஆட்சியை நாங்கள் அமைப்போம் - சசிகலா பேச்சு!

மதுரை, ஏப். 08–

மதுரை திருப்பரங்குன்றம் பேருந்து நிலையத்தில் நேற்று மாலை அனைத்து இந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் சசிகலா தனது கட்சி வேட்பாளரான தனபாண்டியனை ஆதரித்து பிரசாரம் செய்தார். அப்போது அவர் கூறியதாவது:–



ஜெயலலிதா ஆட்சியை நாங்கள் அமைத்திடுவோம் என உறுதியோடு தெரிவிக்கிறேன். கடந்த 5 ஆண்டுகால ஆட்சியில் திமுக செய்த சாதனை என்னவென்றால் பொருளாதார நிலையை அதலபாதாளத்திற்கு கொண்டு சென்றதுதான். அரசுக்கு கிடைக்க வேண்டிய வருவாய் வேறு இடத்திற்கு மடைமாற்றம் செய்யப்பட்டது.

ஏழை, எளிய மக்களை பாதிக்கும் வகையில் மின் கட்டணத்தை உயர்த்தியது, விலைவாசியை உயர்த்தியது, வீட்டுவரி, சொத்து வரி என்று ஒரு நீண்ட பட்டியலை சொல்லும் அளவிற்கு கட்டணங்களை உயர்த்தி உள்ளனர். இந்த தேர்தலில் மீண்டும் மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்துவிடலாம் என்று நினைக்கின்றனர். அது ஒருபோதும் நடக்காது.

தீயசக்தி வேண்டுமா? ஜெயலலிதாவின் ஆட்சி வேண்டுமா? துரோகத்தின் ஆட்சி வேண்டுமா? தியாகத்தின் ஆட்சி வேண்டுமா? என்பதை உணர்ந்து மக்கள் வாக்களிக்க வேண்டும். திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபம் ஏற்றுவதில் பிரச்சினை உள்ளது. அனைத்து சமூகங்களின் உணர்வுக்கும் மதிப்பளித்து ஒற்றுமையுடன் நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## தேனி மாவட்டத்தில் 4 சட்டமன்ற தொகுதியில் 76 வேட்புமனுக்கள் ஏற்பு; 20 மனுக்கள் தள்ளுபடி!

தேனி , ஏப். 08–

தேனி மாவட்டத்தில் ஆண்டிபட்டி, பெரியகுளம், போடி, கம்பம் ஆகிய 4 சட்டமன்ற தொகுதிகள் உள்ளன. இதில் ஆண்டிபட்டியில் தி.மு.க.எம்.எல்.மகாராஜன், போடி தொகுதியில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம். கம்பம் தொகுதியில் தி.மு.க.எம்.எல்.ஏ.ராமகிருஷ்ணன் ஆகியோர் மீண்டும் போட்டியிடுகின்றனர். ஆண்டிபட்டி தொகுதியில் 26 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதில் 21 மனுக்கள் ஏற்கபட்டன. போடி தொகுதியில் 25 மனுக்களில் 19 வேட்புமனுக்கள் ஏற்கபட்டது. பெரியகுளம் (தனி) தொகுதியில் 21 மனுக்களில் 15 மனுக்கள் ஏற்கபட்டன. கம்பம் தொகுதியில் 24 மனுக்களில், 21 வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டன. நான்கு தொகுதிகளிலும் மொத்தம் 96 வேட்புமனுக் தாக்கல் செய்யப்பட்டன. இதில் 76 வேட்புமனுக்கள் ஏற்கபட்டு, 20 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

## ஈரோடு மேற்கில் அமைச்சர் சு.முத்துசாமி தீவிர வாக்கு சேகரிப்பு!



ஈரோடு, ஏப். 08–

ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வேட்பாளர் ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளரும் அமைச்சருமான சு.முத்துச்சாமி கொல்லம்பாளையம் பகுதியில் வீடு வீடாக நடந்தே சென்று வாக்கு சேகரித்தார். அவர் செல்லும் இடமெல்லாம் பெண்கள் ஆரத்தி எடுத்து வரவேற்றனர். இந்நிகழ்ச்சியில் மாவட்டத் துணைச் செயலாளர் ஆ செந்தில்குமார் கொல்லம்பாளையம் பகுதி கழக செயலாளர் க. லட்சுமணகுமார், மாமன்ற உறுப்பினர் எம் என். ராமலிங்கம், வட்ட செயலாளர் மெடிக்கல் சங்கரன், உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 6 சட்டசபை தொகுதிகளில்

## வாக்குச்சாவடியில் பணியாற்றும் அலுவலர்கள் 2-ம் கட்டமாக கம்ப்யூட்டர் சுழற்சி முறையில் தேர்வு!



நாமக்கல், ஏப். 08–

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 6 சட்டசபை தொகுதிகளில் உள்ள வாக்குச்சாவடியில் பணியாற்றும் அலுவலர்கள் 2ம் கட்டமாக கம்ப்யூட்டர் சுழற்சி முறையில் தேர்வு செய்யப்பட்டனர்.

வாக்குச்சாவடிகளில் பணியாற்றவுள்ள அலுவலர்கள் கம்ப்யூட்டர் சுழற்சி முறையில், இரண்டாம் கட்டமாக தேர்வு செய்யும் பணி நடைபெற்றது. மேலும், எலக்ட்ரானிக் வாக்குப்பதிவு இயந்திரம், தபால் வாக்கு, தேர்தல் நுண்பார்வையாளர்கள் பயிற்சி, தபால் வாக்கு பதிவிற்கான பயிற்சி, வாக்கு சீட்டு ஆகிய பொருள் குறித்து தொடர்புடைய பொறுப்பு அலுவலர்களுக்கான ஆய்வுக்கூட்டம், நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடந்தது.

முன்னதாக மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சியருமான துர்கா மூர்த்தி தலைமையில், தேர்தல் பொதுப் பார்வையாளர்களான மனோஜ் புஷப், சஞ்சய் லாலாசாஹிப் யாதவ் ஆகியோர், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் கட்டுப்பாட்டு அறை, ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு மையம் ஆகியவற்றின் செயல்பாடுகளை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டனர். டி.ஆர்.ஓ.,க்கள் சரவணன், கண்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் சந்தியா, சுஜாதா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### நாமக்கல் சட்டசபை தொகுதி திமுக வேட்பாளராக

## மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் ராணி அறிவிக்கப்பட்டுள்ளார்!




நாமக்கல், ஏப். 08–

நாமக்கல் சட்டசபை தொகுதி திமுக வேட்பாளராக, மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் ராணி அறிவிக்கப்பட்டுள்ளார். அவர் இன்று காலை, நாமக்கல் –சேலம் ரோட்டில் உள்ள கட்சியின் தலைமை தேர்தல் அலுவலகத்தில் இருந்து, திமுக மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் படை சூழ ஊர்வலமாக வந்து, நாமக்கல் சட்டசபை தேர்தல் அதிகாரி, ஆர்டிஓ சாந்தியிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: நாமக்கல் சட்டசபை தொகுதிக்கு திமுக சார்பில் முதல் முறையாக பெண் வேட்பாளராக போட்டியிட கட்சி எனக்கு அனுமதி வழங்கியுள்ளது. நான் ஏற்கனவே இப்பகுதியில் நகராட்சி கவுன்சிலர், ஊராட்சி தலைவர், ஊராட்சி ஒன்றிய தலைவர் உள்ளிட்ட பதவிகளில் பணிபுரிந்துள்ளேன்.

எனவே எனக்கு மக்களின் அடிப்படை பிரச்சினைகள் குறித்து நன்கு தெரியும். நான் வெற்றிபெற்றால் மக்களின் அடிப்படை பிரச்சினைகளை உடனடியாக நிறைவேற்றுவேன். கடந்த 5 ஆண்டுகளில் திமுக அரசின் திட்டங்கள் ஒவ்வொரு வீட்டையும் சென்றடைந்துள்ளது. அதனால் ஒட்டு கேட்க செல்லும் இடங்களில் எல்லாம், பொதுமக்கள் திமுகவுக்குதான் ஓட்டளிப்பார்கள் என்பது, தெளிவாக தெரிகிறது.

குறிப்பாக பெண்களுக்கான திட்டங்கள் அதிக அளவில் நிறைவேற்றப்பட்டுள்ளதால், பெண்கள் திமுகவுக்கு மிகவும் ஆதரவாக உள்ளனர். எனவே இந்த தேர்தலில் குறைந்தபட்சம் 50 ஆயிரம் ஓட்டு வித்தியாசத்தில் வெற்றிபெற்று நாமக்கல் சட்டசபை தொகுதியின் முதல் பெண் எம்எல்ஏவாக பதவியேற்பேன் என அவர் கூறினார்.




திருப்பூரை மையமாகக் கொண்ட இந்திராசுந்தரம் தொண்டு நிறுவனம் சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் அனைத்து தரப்பு மக்களுக்கும் செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக கோடை காலத்தை முன்னிட்டு இந்திராசுந்தரம் தொண்டு நிறுவனம் சார்பில் திருப்பூர் காங்கேயம் சாலையில் உள்ள அலுவலகம் அருகில் தாகம் தீர்க்க தர்பூசணி பந்தல் இன்று திறக்கப்பட்டது. திறப்பு விழாவிற்கு சிறப்பு விருந்தினராக ஆதரவற்ற முதியோர்களை வரவழைத்து பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டு ரிப்பன் வெட்டி தர்பூசணி பந்தலை திறந்து வைத்தனர். முன்னதாக திருநங்கைகள் அவர்களுக்கு பூத்தூவி வரவேற்பு அளித்தனர். பின்னர் பொது மக்களுக்கு தர்பூசணி, வெள்ளரிக்காய், முலாம்பழம் உள்ளிட்ட பழ வகைகள் வழங்கப்பட்டது. பொதுமக்களும் ஆர்வமாக வந்து பழச்சாறு அருந்தி தாகத்தை தனித்தனர். இந்நிகழ்வில் இந்திரா சுந்தர தொண்டு நிறுவனர் இந்திரா, செயலாளர் ராஜா முகமது உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020